வாக்குமூலம்

2வது கூடதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

வழக்கு எண். 90/2021

சாட்சிகள் : PW 1

solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Rajkumar | ஜாதி | : |
| தந்தை பெயர் | : Elangovan | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on 11th day July 2023.

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் தற்போது எண்.37, 6வது குறுக்கு தெரு, கே.சி கார்டண். பெரவல்லூர், சென்னை - 600082. நான் மென்பொறியாளராக கம்பியூட்டர் நிறுவனத்தில் வேலைப்பார்க்கிறேன். 23.11.2019 அன்று இரவு சுமார் 11.00 மணிக்கு மேல் நாங்கள் அப்போது தங்கியிருந்த 62/8, போலிஸ் குவார்டடர்ஸ், திருமுல்லைவாயல் வீட்டிற்கு வந்தேன். நான் அப்போது குளித்துவிட்டு என் அறைக்கு சென்று படுத்துவிட்டேன். சுமார் 12.00 மணிகது மேல் கதவை படபடவென்று தட்டப்பட்டது. அதிபயங்கரமாக அந்த தட்டல் சத்தம் இருந்ததால் பயந்துகொண்டு கதவை திரக்கவில்லை. ஜென்னல் கதவை திரந்து பாத்தபோது பக்கத்துபிளாட்டில் 62/7, விலாசத்தில் வசித்த போலிஸ்காரர் வெங்கடேஷ் உடலில் தோல் உறிந்தநிலையில் நின்றிருந்ததை பார்தேன். வெளியில் இருந்து குடிக்க தண்ணீர் கேட்டார். கதவை திரந்த உடன் தண்ணீரைக்குடித்துவிட்டு நேரகா எங்கள் வீட்டு பாத்ரூமிற்கு சென்று தண்ணீரை திரந்துவிட்டு கீழே

உட்கார்ந்துவிட்டார். அப்போது அவர் அவர் வீட்டில் தீப்படித்திருப்பதாகவும் அவருடைய பெண் அங்கு இருப்பதாகவும் அவளை காப்பாற்றி கொண்டுவாருங்கள் என்று சொன்னார். நான் அவர் வீட்டின் உள்ளே சென்று குழந்தையை காப்பாற்றி என் வீட்டிற்கு கொண்டுவந்தேன். என்ன ஆயிற்று என்று கேட்டோம் அதற்கு அவர் உடன் இருக்கும் ஆஷா ராணி கொளுத்திவிட்டதாக சொன்னார். அதன் பிறகு கிழே உள்ள பிளாட்டில் தட்டி விஷயத்தை சொன்னேன். அவர்கள் மேலே வந்துவிட்டார்கள். அதன் பிறகு குவார்ட்டர்ஸ் லைனர் மற்றும் மற்றவர்களும் வந்துவிட்டார்கள். அதன்பிறகு காயம் பட்ட வெங்கடேஷை ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனையில் சேர்த்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன். வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி எனக்கு தெரியும் அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கிறார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

நான் கம்ப்யூட்டர் சைன்ஸ் இன்ஜீனியரிங் படித்திருக்கிறேன். இந்த வழக்கில் போலிசார் சம்மந்தப்பட்ட வெங்கடேஷ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோதே போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஷா ராணி தான் தன்னை கொளுத்திவிட்டதாக வெங்கடேசன் சொன்னதாக போலிஸ் விசாரணையில் சொன்னேன். போலிசார் விசாரணையில் ஆஷா ராணியை என்னால் அடையாளம் காட்ட முடியும் என்று சொன்னேன். சம்பவத்திற்கு பிறகு போலிசார் ஆஷா ராணியை அடையாளம் காட்ட சொல்லவில்லை. தோரயமாக போலிஸ் கோர்டர்ஸ ில் நான் ஆறு மாதமாக வசித்துவந்தேன். இறந்துபோன் போலிஸ் வெங்கடேஷ் அங்கு எப்போது குடிவந்தார் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் இரவு சுமார் 11.00 மணிக்கு மேல் வந்ததாகவும் அதன் பிறகு கதவை சாத்திவிட்டு உள்ளே போய்விட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வீடு மாடியில் உள்ளது. படிக்கு அந்தபுறம் எங்கள் வீடும், படிக்கு இந்தபுறம் வெங்கடேஷ் வீட இருந்தது. 2 வீடுகளுக்கு இடையில் சுமார் 20 அடி தூரம் இடைவெளையிருக்கும். என் வீட்டிற்கு எந்த பக்கம் ஜென்னல் இருந்தது என்றால்,

கதவிற்கு பக்கத்திலேயே ஜென்னல் இருந்தது. வெங்கடேஷை நான் ஜென்னல் திரந்து பார்த்தபோது உடை ஏதும் இல்லாமல் இருந்தார். தண்ணீர் எதுவும் இல்லை. என்னை போலிசார் விசாரித்தபோது அவர் மேல் தண்ணீர் இருந்ததாக சொல்லவில்லை. நான் இந்த சம்பவத்திற்கு முன்னால் ஆஷா ராணி, வெங்கடேஷ் இடமும் பேசியிருக்கிறேன். ஆஷா ராணியும், வெங்கடேஷ் சந்தோஷமாக வாழந்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. மற்ற போலிசார் வீடுகளும் அங்கு கதவு சாத்தப்பட்டு தான் இருந்தது. சம்பவத்தின் போது மென்பொறியாளராக கக்னிசன்ட் நிறுவநத்தில் வேலைப்பார்தேன். அப்போது என்னுடைய ஷிப்ட் மதியம் 2.00 மணி முதல் இரவு 11.00 மணிவரையாகும். சம்பவம் நடந்த மறுநாள் காலை சுமார் 8.00 மணிக்கு திருமுல்லைவாயல் போலிசார் வந்தனர். சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். இறந்த வெங்கடேஷின் குடும்ப பிரச்னை பற்றி எனக்கு தெரியாது. நான் அன்றைய தேதியில் நான் சொன்ன சமயத்தில் என் வீட்டில் நான் இல்லை என்றால் சரியல்ல. வெங்கடேஷன் என்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றாலும், போலிசார் சொல்லக்கொடுத்ததை அவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்திற்கு வந்து அப்படியே சொல்கிறேன் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காப்பாற்றிய குழந்தையின் வயது என்ன இருக்கும் என்று என்னால் சொல்ல இயலவில்லை.

மறுவிசாரணை இல்லை.

வாக்குமூலம்

2வது கூடதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

வழக்கு எண். 90/2021

சாட்சிகள் : PW 2

solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Shanthi | ஜாதி | : |
| கணவர் பெயர் | : Elangovan | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872

on 11th day July 2023.

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை:-

நான் தற்போது எண்.37, 6வது குறுக்கு தெரு, கே.சி கார்டண். பெரவல்லூர், சென்னை - 600082. நான் தற்போது காவல் துறையில் C.W.C-யில் அசோக் நகர் சென்னையில் ' உதவியாளராக பணி செய்கிறேன். என் கணவர் 2வது பெட்டாலியன் காவளராக வேலைப்பார்த்து பணியில் இருக்கும் போதே காலமாகிவிட்டதால் கருனை அடிப்படையில் எனக்கு அதே துறையில் வேலைக்கொடுத்தார்கள். அதன் காரணமாக குவார்ட்டர்ஸில் தங்குவதற்கு அனுமதி அளித்தார்கள். 23.11.2019 அன்று சுமார் இரவு 12.45 மணிக்கு இருக்கும் எங்கள் வீட்டில் வந்து யாரோ கதவை தட்டுவதுபோல் இருந்தது. அப்போழுது ஜென்னலை திரந்து யார் என்று எட்டிப்பார்தேன். அங்கு வெங்கடேஷன் நின்றிருந்தார். தண்ணீர் வேண்டும் என்று கேட்டார். அப்போது அவர் உடம்பு முழுவதும் தோல் உரிந்த நிலையில் இருந்தார். கதவை திரந்து தண்ணீர்

கொடுத்தேன். எங்கள் வீட்டின் குளியல் அறைக்கு சென்று தண்ணீரை திறந்துவிட்டு உடம்பெல்லாம் எரிகிறது என்று சொன்னார். அதன் பிறகு என்னிடம் தன்னுடைய பாப்பா வீட்டில் இருப்பதாகவும் அவரை அழைத்துவரவேண்டும் என்று சொன்னார். நான் தான் சென்று அந்த குாந்தையை அழைத்து சென்று வந்தேன். வெங்கடேஷன் என் குவார்ட்டர்ஸ்க்கு பக்கத்து வீட்டில் இருந்தார். பின்பு கீழ் வீட்டில் தட்டி தகவல் சொன்தும் எல்லோரும் வந்துவிட்டார்கள். அதன் பிறகு ஆம்பிலன்ஸ் கூப்பிட்டும் வர தாமதம் ஆனதால் ஆட்டோவில் ஏற்றி வெங்கடேஷை ஆட்டோவில ஏற்றி சென்றுவிட்டார்கள். இது சம்மந்தமாக மறுநாள் காலை சுமார் 11.00 மணிக்கு வந்து விசாரித்தார்கள். இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட நபரை எப்போதாவது தான் நான் பார்ப்பது உண்டு. அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். இது சம்மந்தமாக போலிசார் என்னைவிசாரிததார்கள் நடந்ததை சொன்னேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

சம்பவததிற்கு பிறகு போலிசார் யாரையேனும் அடையாளம் காட்ட சொன்னர்களா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் சம்பவத்தில் சம்மந்தப்பட்டவரை என்னால் அடையாளம் காட்ட இயலும் என்று சொல்லவில்லை. நான் காப்பாற்றிய குழந்தைக்கு சுமார் 3 வயதிருக்கும். போலிசார் சம்பவ இடத்திற்கு மறுநாள் காலை சுமார் 11.00 மணிகு வந்தார்கள். சம்பவம் நடந்து வெங்கடேஷன் எவ்வளவு நேரம் குவார்ட்டர்ஸில் இருந்தார் என்று எனக்கு தெரியவில்லை. நான் பகலில் வீட்டில் இருப்பது இல்லை. அதேபோல் என் மகனும் வீட்டில் இருப்பதில்லை. அந்த கோர்டர்ஸில் யார் யார் இருக்கிறார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது. வெங்கடேஷன் எப்போது எப்போது குவார்ட்டர்ஸ்க்கு குடிவந்தார் என்ற விவரம எனக்கு தெரியாது. நான் காவல் துறையில் வேலைப்பார்பதால் அவர்களுக்கு பவ்விய பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.